# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 17 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 11

## தத்தைவிடு தூது

1 தத்தைவிடுதூது இலக்கியத்தின் ஆசிரியர் யார்? அது எவ்வகை இலக்கியம்

2 **தத்தைவிடு தூர்து இலக்கியத்தில்**

அ. தத்தை என்பதன் பொருள் யாது?

ஆ. இவ்விலக்கியத்தின் மூலம் கவிஞர் எதனை கூற வரைும்புகிறார்.

3. **மானேங்கு மைவிழியென் வஞ்சியிடைப் பைந்தொடிபால்**
**நானீங்கு புகலுமொழி நற்கிளியே...**

அ. மானெங்கு மைவிழி என்பதன் பொருள் யாது?

ஆ. வஞ்சியிடை என்பதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

4. **புவியில் கொங்கு மலர் மாலை குரங்கிற்கு அளிப்பாரோ**
**கோதையிடம் இம்மாற்றம் கூறுதியால்....**

அ. கொங்கு மலர் மாலை என்பதன் பொருள் யாது?

ஆ. கோதை என்பதன் கருத்து யாது?

5. **மூடருக்கும், பேடருக்கும், முதியோர் மெலியோர்க்கும்**
**தேடருநல் இரத்தினம் போல் தெரிவையரை சேர்த்துவரோ.....**

அ. மூடர், பேடர் என்பன குறித்து நிற்கும் பொருள்?

ஆ. பெண்களின் சிறப்பு இங்கு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

6. **தம்பெருமை தாமறியாப் தஞ்சமிலாப் பெண்கடமை**
**வெம்புலிவாய் மானென்ன வீணே கொடுத்திடுவார்...**

அ. இங்கு வெளிப்படும் அணியினை குறிப்பிடுக?

7. **மெல்லியர்பால் கல்வி விரும்பாத வீணரெலாம் எல்லையிலா**
**இன்பு அடைதற்கு இடையுறு என்றே இயம்பாய்...**

அ. இங்கு மெல்லியர் எனக் கருதப்படுது ?

ஆ. இங்கு வீணர் என்போர் யார்?

இ. பயனில்லாதவர் செயல்கள் எவையென குறிப்பிடுக.

8. **சின்னப் பதுவை கொடு சிறார் செய்மணம் போலுமரோ**
**தெரிவை அவட்கு இம்மாற்றம் சீர்கிளியே கூறுதியால்...**

அ. பெண் அடிமைத்தனம் இங்கு எவ்வாறு வெளிப்படுகின்றது?

ஆ. ஆராயாது செய்யும் திருமணத்தை எதற்கு உவமிக்கின்றனர்?

9. **அன்ன நடை மை விழியாள் அம்பொன் மலர்க் கொம்பு அணையாள்**
**என் இதய தாமரைக்கு ஓர் இலக்குமியாம்.....**

அ. இங்கு இடம்பெற்றுள்ள உவமை அணி ஒன்றினை குறிப்பிடுக?

ஆ. இங்கு பயிலப்படும் உருவ அணியினைக் குறிப்பிடுக?

10. **தந்தை தாயார் இலரேல் தரியாள் என் பாங்கருடன்**
**வந்தாள் மகிழ்ந்தாள் வதிந்தாள் பசுங்கிளியே....**

அ. காதலியின் குணப்பண்பு யாது?

ஆ. பாங்கர் என்பதன் கருத்து யாது?

11. **கண்ணை மறைத்தே கொடு போய் காட்டில்விடும் பூஸையைப் போல**
**பெண்ணை மனையடைத்து பின்னொருவர் கைக் கொடுப்பார்..**

அ. பூஸை என்பது குறிக்கும் பொருள் யாது?

ஆ. இவ்வடிகளில் புலப்படும் அணி யாது?

12. **"கூட்டிற் பசுங்கிளியே கோதையரை எப்பொழுதும்**
**வீட்டில் அடைத்து வைக்கும் விரகிலர்க்கு யாதுரைப்போம்"**

அ. "விரகிலர் என்போர் யார்?

ஆ.கவிஞர் உணர்த்த விரும்புவது யாது?

## பகுதி 02

01 கிளி உறையும் சூழலை கவிஞர் எவ்வாறு வர்ணிக்கின்றார்.

02. பெண் அடிமை செய்வோர் மீது கவிஞர் கொண்டுள்ள சினம் வெளிப்படும் விதத்தினை எடுத்துக்காட்டுக

03. இப் பகுதியில் காதலி பற்றி வர்ணனை/காதலியின் அழகுச் சிறப்புக்களை எடுத்துக் காட்டுக.?

04 தத்தை விடு தூது எனும் பகுதியில் தலைவன் எத்தகைய வேண்டுகோள்களை கிளியிடம் முன்வைக்கின்றான்

05. இவ் இலக்கியம் கூறும் படிப்பினை யாது?

06. இப்பகுதியில் காதலனின்/ தலைவனின் குணப்பண்புகள் பற்றி எடுத்துரைக்க?

07. இப் பகுதியில் பெண் விடுதலை /பெண்ணியம் சார்ந்த கருத்துக்கள் பற்றி எடுத்துரைக்குக.

08. இப் பகுதியில் தலைவன் தலைவி மீது கொண்ட காதல் எவ்வாறு புலப்படுகின்றது.